இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

விழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 276 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – வைகாசி 03 – சனிக்கிழமை 17 மே 2025 – கோவை ★★ 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 276 : Thiruvalluvar Year - 2056 - Vaikasi 03 - Saturday 17 May 2025 - Kovai ★★ 16 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.5.2025) நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், அரசு தாவரவியல் பூங்காவில் 127–வது மலர்க்காட்சியை தொடங்கி வைத்து, பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், அரசு தலைமைக் கொறடா கா. ராமச்சந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மை – உழவர் நலத்துறை செயலாளர் வ. தட்சிணாமூர்த்தி, வேளாண்மைத் துறை இயக்குநர் பா. முருகேஷ், தோட்டக்கலை மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ. குமாரவேல் பாண்டியன், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு, திருமதி துர்கா ஸ்டாலின் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### ஆளுநர் வழக்கில் குடியரசுத் தலைவர் மூலம் விளக்கம் கேட்பு – உச்சநீதிமன்றத்திற்கே சவாலா?

# பா.ஜ.க. ஆளாத மாநிலங்களை முடக்க முயற்சியா ?

## ஒன்றிய அரசுக்கு - முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

**சென்னை, மே 17-**

**ஆளுநர் வழக்கில் அரசியலமைப்பு நிலைப்பாட்டை நிலைகுலைக்கும் விதத்தில் குடியரசுத் தலைவர் மூலமாக ஒன்றிய அரசு உச்சநீதிமன்றத்திடம் விளக்கம் கோரியுள்ளதைக் கண்டித்து - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**

தமிழ்நாடு ஆளுநர் தொடர்பான வழக்கிலும், அதுபோன்ற பிற நிகழ்வுகளிலும் உச்சநீதிமன்றம் ஏற்கெனவே தீர்ப்பளித்து முடித்து வைத்துள்ள விவகாரத்தில், அந்த அரசியலமைப்பு நிலைப்பாட்டை நிலைகுலைக்கும் விதத்தில் குடியரசுத் தலைவர் மூலமாக ஒன்றிய அரசு உச்சநீதிமன்றத்திடம் விளக்கம் கோரியுள்ளதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

**மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசைச் சிறுமைப்படுத்தும் செயல்!**

இதன் மூலமாக, தமிழ்நாடு ஆளுநர்



அவர்கள் பா.ஜ.க.வின் தூண்டுதலின் பேரில்தான் மக்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசைச் சிறுமைப்படுத்தும் வகையில் நடந்துகொண்டார் என்பது அம்பலமாகியுள்ளது.

இது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளை ஒன்றிய அரசின் முகவர்களான ஆளுநர்களின் கட்டுப்பாட்டில் வைத்து அவற்றை பலவீனப்படுத்தும் முயற்சியே அன்றி வேறில்லை. மேலும், இது சட்டத்தின் மாட்சிமைக்கும், அரசியலமைப்புச் சட்டத்தைப் பொருள்கொள்வதில் இறுதித் தீர்ப்பளிக்கும் உரிமை கொண்ட உச்சநீதிமன்றத்துக்கும் நேரடியாகச் சவால் விடுகிறது.

**ஆளுநர்களின் முட்டுக்கட்டையை சட்டப்பூர்வமாக்க பா.ஜ.க. முயற்சி!**

- **ஆளுநர்கள் முடிவெடுக்கக் கால நிர்ணயம் செய்யப்படுவதில் எதற்கு எதிர்ப்பு இருக்க வேண்டும்?**
- **சட்ட முன்வடிவுகளுக்கு ஒப்புதல் அளிப்பதில் காலவரையற்ற தாமதத்தை அனுமதிப்பதின் வழியாக, ஆளுநர்களின் முட்டுக்கட்டையை பா.ஜ.க. சட்டபூர்வமாக்க முயல்கிறதா?**
- **பா.ஜ.க. அல்லாத கட்சிகள் ஆளும் மாநிலச் சட்டமன்றங்களை ஒன்றிய அரசு முடக்க எண்ணுகிறதா?**

மிக முக்கியமான கட்டத்தில் நமது நாடு நிற்கிறது. உச்சநீதிமன்றத்தின் விளக்கம் கோரி எழுப்பப்பட்டுள்ள வினாக்கள் அரசியலமைப்புச் சட்டம் ஒன்றிய அரசுக்

> **“உச்சநீதிமன்றத்தின் விளக்கம் கோரி எழுப்பப்பட்டுள்ள வினாக்கள் அரசியலமைப்புச் சட்டம் ஒன்றிய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையே அதிகாரங்களைப் பகிர்ந்தளித்துள்ள தன் அடிப்படையையே சீர்குலைக்கவும், எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலச் சட்டமன்றங்களைத் திறனற்றதாக்கவும் நினைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் தீய எண்ணத்தை வெளிப்படுத்துகிறது. ஆகையால், மாநில சுயாட்சிக்கே இது உடனடி ஆபத்தை உருவாக்கியுள்ளது.”**

கும் மாநில அரசுக்கும் இடையே அதிகாரங்களைப் பகிர்ந்தளித்துள்ளதன் அடிப்படையையே சீர்குலைக்கவும், எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலச் சட்டமன்றங்களைத் திறனற்றதாக்கவும் நினைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் தீய எண்ணத்தை வெளிப்படுத்துகிறது. ஆகையால், மாநில சுயாட்சிக்கே இது உடனடி ஆபத்தை உருவாக்கியுள்ளது.

**பா.ஜ.க. அல்லாத மாநில அரசுகள் கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு!**

இத்தகைய நெருக்கடியான சூழ்நிலையில், பா.ஜ.க. அல்லாத அனைத்து மாநில அரசுகள் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள் அரசியலமைப்புச் சட்டத்தைப் பாதுகாப்பதற்கான சட்டப் போராட்டத்தில் இணையுமாறு வலியுறுத்துகிறேன்.

நம் ஒட்டுமொத்த ஆற்றலையும் ஒருங்கிணைத்து இப்போராட்டத்தில் ஈடுபடுவோம்!

தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

### உதகமண்டலம்

# அரசு தாவரவியல் பூங்காவில் - 127வது மலர்க்காட்சி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்!

## ரூ.25 லட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்ட ‘பெரணி இல்லத்தை’ திறந்து வைத்தார்!

**சென்னை, மே 17-**

**உதகமண்டலம், அரசு தாவரவியல் பூங்காவில் 127-வது மலர்க்காட்சியை தொடங்கி வைத்து, ரூ.24.60 இலட்சம் செலவில் புதுப்பிக்கப்பட்ட பெரணி இல்லத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

அதன் விவரம் வருமாறு:-

நீலகிரி மாவட்டத்திற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 13.5.2025 அன்று தெப்பக்காடு யானைகள் முகாமில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 5 கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவில் 44 அரசு குடியிருப்புகளுடன் கட்டப்பட்டுள்ள யானைப் பாகன்களுக்கான மாவூத் கிராமத்தை திறந்து வைத்து, முதுமலை புலிகள் காப்பகத்தில் தமிழகத்திலேயே முன்னோடியாக 15 கி.மீ. நீளத்திற்கு தொரப்பள்ளி முதல் தெப்பக்காடு வரை 5 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள வான்வழி தொகுப்புக் கம்பிகளின் (Aerial Bunched Cable) சேவைகளைத் தொடங்கி வைத்து, வன சரகர்களின் பயன்பாட்டிற்காக 2 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 32 வாகனங்களின் சேவைகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

பின்னர், தெப்பக்காடு யானைகள் முகாமில் பணிபுரியும் மாவூத் மற்றும் காவடிகளுடன் கலந்துரையாடி, அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டு, அவர்களுக்கு பரிசுகளை வழங்கிச் சிறப்பித்தார்.

அதனைத் தொடர்ந்து, 14.5.2025 அன்று நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று, அதன் செயல்பாடுகள் குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்து, மருத்துவமனையில் உள்ள நோயாளிகளிடம் மருத்துவ வசதிகள் குறித்தும், அவர்களது தேவைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

பின்னர், நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரிக்குச் சென்று, மருத்துவக் கல்லூரி மாணவர்களுடன் கலந்துரையாடி, வீட்டிற்கும் நாட்டிற்கு பெருமைத் தேடி தரும் வகையில் சேவை மனப்பான்மையுடன் மருத்துவப் பணியை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தி, மருத்துவக் கல்லூரி மாணவர்களின் தேவைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

அதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் (15.5.2025) முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், அரசு தாவரவியல் பூங்காவில் 127-வது மலர்க்காட்சியை தொடங்கி வைக்க செல்லும் வழியில், பெருந்திரளான பெண்கள், சிறுவர் சிறுமியர் உள்ளிட்ட பொதுமக்கள் முதலமைச்சர் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

உதகமண்டலம், அரசு தாவரவியல் பூங்காவிற்கு வருகை தந்த முதலமைச்சர் அவர்கள் 127-வது மலர்க்காட்சியைத் தொடங்கி வைத்து, 24 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்ட பெரணி இல்லத்தை திறந்து வைத்தார்.

கோடைக்காலத்தில் நீலகிரியின் அழகினைக் கண்டுகளிக்க வரும் இலட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகளை உற்சாகப்படுத்தும் வகையில் தோட்டக்கலைத் துறை சார்பாக பல்வேறு கண்காட்சிகள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது. இவ்வாண்டு 127-வது மலர்க்காட்சி 15.05.2025 முதல் 25.05.2025 வரை நடைபெற உள்ளது.

இந்த ஆண்டு நடைபெறும் 127-வது மலர்க்காட்சியில் சுமார் 40,000 வண்ண மலர்த் தொட்டிகள்

தொடர்ச்சி 2ஆம் பக்கம்